# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590


**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 15273/விசாரணை/E/2023**

திரு.R.பத்மநாபன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி-635 115. .. பொது அதிகார அமைப்பு

******

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 15.10.2025 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்க்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது :-

*இவ்வாணை கிடைக்கப் பெற்ற 60 தினங்களுக்குள், கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலர் அவர்கள், மேல்முறையீட்டாளரின் 26.11.2021 தேதியிட்ட புகார் மனு மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு இறுதி ஆணை பிறப்பித்து அது குறித்த தகவலை மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, மேல்முறையீட்டாளர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலை இணைத்து ஒரு அறிக்கையாக இவ்வாணையத்தில் 06.01.2026 அன்று பொதுத் தகவல் அலுவலர் மூலம் நேரில் சமர்ப்பிக்குமாறு கிருஷ்ணகிரி மாவட்ட வருவாய் அலுவலர்/மேல்முறையீட்டு அலுவலருக்கு இவ்வாணையம் உத்தரவிடுகிறது. தவறும்பட்சத்தில், முன்னாள் மற்றும் இந்நாள் பொதுத் தகவல் அலுவலர்கள் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவுகள் 20(1) மற்றும் 20(2)-ன் கீழான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும், மேல்முறையீட்டாளருக்கு சட்டப்பிரிவு 19(8)(b)-ன்படி நஷ்டஈடு வழங்கிட பொது அதிகார அமைப்பிற்கு உத்தரவு பிறப்பிக்க நேரிடும் என்றும் இவ்வாணையம் அறிவுறுத்துகிறது.*

2. மேற்குறித்த உத்தரவிற்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலர் சார்பாக ஊத்தங்கரை வட்டாட்சியர் அலுவலக தலைமையிடத்து துணை வட்டாட்சியர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.சகாதேவன் 04.02.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலரின் 02.02.2026 தேதியிட்ட அறிக்கையை தாக்கல செய்தார்.

3. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது)/பொதுத் தகவல் அலுவலர் 02.02.2026 தேதியிட்ட தனது அறிக்கையில், ஆணையத்தின் உத்தரவின்படி, மேல்முறையீட்டாளரது கோரிக்கை மனு மீது கிருஷ்ணகிரி வருவாய் கோட்ட அலுவலரால் 21.11.2025 அன்று இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் நகலை இணைத்து மேல்முறையீட்டாளருக்கு 02.12.2025 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக 08.12.2025 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டு, மேல்முறையீட்டாளர் அதனை 09.12.2025 அன்று பெற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளர் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் துறையின் இணையதள Tracking Report-ன் நகலை ஆணையத்தின் முன் தாக்கல் செய்ததன் அடிப்படையில், இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள் : 06.04.2026**

**ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 15273/விசாரணை/E/2023</u>**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (பொது),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி-635 115.

திரு.R.பத்மநாபன்
பழைய அஞ்சல் அலுவலகத் தெரு,
கல்லாவி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம், கிருஷ்ணகிரி-635 304.

Copy to: File
RJ/PS 7.4